பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ 1953 ★ ★ 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: புரட்டாசி 19 (5—10—72) வியாழன் வெளியூர்: புரட்டாசி 20 (6—10—72) வெள்ளி [இதழ்: 93

விலைவாசி உயர்வு— ஓராண்டில் 8 சதவிகிதம் அதிகரிப்பு

புதுடில்லி, அக். 5—

1972 செப்டம்பர் முதல் வாரத்தில் மொத்த விலைவாசி தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்தது.

அதிகாரபூர்வமான விலைவாசிக் குறியீட்டெண் 208.2 புள்ளியாக இருந்தது; இது 1971 செப்டம்பர் மத்தியில் இருந்ததைவிட 8 சதவிகிதம் அதிகமாகும்.

'சமூக நீதி' அடிப்படையில் மற்றொரு நடவடிக்கை

தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

இந்தியாவிலேயே முன்னோடியாகத் தமிழ்நாட்டில் புதிய திட்டம்

தமிழக அரசின் குறிக்கோளை விளக்கி நாவலர்—க. இராசாராம்—சத்தியவாணிமுத்து உரை

சென்னை, அக். 5—

"நாட்டில் வளர்ந்துவரும் தேவைகளுக்கு ஏற்பக் கல்வி முறையும்—பாடத் திட்டமும்—பாடம் கற்பிக்கும் முறையும் மாறவேண்டும்.

'நம் நாட்டில் தற்போதுள்ள பரீட்சை முறைகள், மாணவர்களின் நினைவாற்றலைச் சோதிப்பதாகவே உள்ளன, மாணவர்களின் அறிவுத் திறனையும்—சிந்தனை சக்தியையும் வளர்க்கக்கூடிய புதிய பாடத்திட்டங்களை உருவாக்கவேண்டும்; பல முறை—பல்வேறு ஆய்வுக் குழுக்களால் இந்தக் கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டிருந்தும், இன்னமும் இது நனவாகவில்லை.

"பிற நாட்டு மாணவர்களுக்கு இணையானவர்களாக நம் மாணவர்களை உருவாக்க வேண்டும்; மாணவர்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்; தாங்கள் கற்றறிந்ததை பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் எடுத்துரைத்து—அவர்களும் முன்னேற உதவவேண்டும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

தாழ்த்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு வகுத்திருக்கிறது.

இதன்படி, தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் பி.எஸ்சி. வகுப்புக்குத் தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சுமார் 260 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்; இவர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு, தத்தம் பாடங்களிலும—ஆங்கிலத்திலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

மூன்று வாரம் நடைபெறும் இந்தப் பயிற்சி சென்னை மாநிலக் கல்லூரியில் கடந்த செப்டம்பர் 16-ந் தேதியிலிருந்து துவங்கி நடைபெற்று வருகிறது; இது, அக். 7-ம் நாள் முடிவுறும்.

கிராமச் சூழ்நிலைகளில் இருந்து படித்துவந்த இந்த மாணவர்களுக்குச் சென்னை போன்ற நகரங்களிலிருந்து இந்தப் பயிற்சி அளிக்கப்படுவது மிகுந்த பயன்தரக்கூடும் என்று கருதி, தமிழ்நாடு சமுதாய வளர்ச்சித் துறை, இந்தத் திட்டத்தை முதன்முதலாகச் செயல்படுத்துகிறது.

இப்போது நடைபெறும் இப்பயிற்சித் திட்டத்துக்கு அரசு ரூ 60,000 ஒதுக்கியிருக்கிறது; இனிமேல் இப்படிப்பட்ட பயிற்சிகளை ஆண்டில இரு தடவை நடத்த அரசு தீர்மானித்திருக்கிறது.

இப்போது நடைபெறும் பயிற்சியில் 258 பேர் கலந்துகொண்டுள்ளனர்; இவர்களில் 79 பேர் பெண்களாவர். இந்த ஆண்டில் இப்பயிற்சியில் ஒரு சில முன்னேறிய வகுப்பு மாணவர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பௌதிகம்—வேதியல் தாவர இயல்—விலங்கியல்—கணிதம்—ஆங்கிலம் ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன; மாநிலக் கல்லூரி ஆசிரியர்கள் இப்பயிற்சியை அளிக்கின்றனர்; ஆங்கிலப் பயிற்சிக்குப் பிரிட்டிஷ் கவுன்சில் நிபுணர்களும் உதவி செய்கின்றனர்.

"சமுதாயத்தில் முற்போக்கு நிலையில் இருந்துவரும் மாணவர்களுடன் போட்டியிடும் தகுதியைத் தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்"

என்று இந்தத் தனிப் பயிற்சி வகுப்புகளின் நிறைவு நாள் விழாவில் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

அமைச்சர் க. இராசாராம்

இந்நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள், 'இப்படிப்பட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம தமிழகம் தவிர வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படுவதில்லை' என்று சுட்டிக் காட்டினார்.

"கல்விக்காக அரசாங்கம் செலவழிக்கும் தொகைக்கு ஏற்ற அளவில் கல்வி வளர்ச்சி ஏற்படவில்லை" என்று குறிப்பிட்டார்.

இந்தப் பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்த பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு நன்றி தெரிவித்தார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

அரிசன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், பயிற்சியில் கலந்துகொண்ட மாணவ—மாணவிகளுக்கு நற்சான்று இதழ்களை வழங்கினர்; தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சலுகைகள் அளிப்பது பற்றி விமர்சிப்பவர்களை அவர் கண்டித்தார்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு அளித்துவரும் சலுகைகளை விளக்கினர்.

கல்லூரி முதல்வர் ஜே. இராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

சமுதாய வளர்ச்சித் துறைச் செயலாளர் டி. கே. ஓசா நன்றி கூறினர்.

பயிற்சி பெறும் மாணவர்களில் ஒருவரான சம்பத்குமார் என்பவர் அரசு செய்த இந்தச் சீரிய பணிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கல்லினாலான லிங்கம் கண்டுபிடிப்பு

கடலூர், அக். 5—

சிதம்பரம் தாலுகா முடிகண்டநல்லூர் கிராமத்தில் புல்டோஜரைக்கொண்டு சாலையைச் சமனபடுத்தி வருகையில் சுமார் ஒரு கெச ஆழத்தில் கல்லினால் ஆன இரண்டரை அடி லிங்கம் ஒன்று கிடைத்தது.

கடல்வள ஆய்வுக்கூடம் சென்னையில் ஏற்படும்

சென்னை, அக். 5—

கடல் வளம் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழில்—விஞ்ஞான ஆய்வுக்கூடம் ஒன்றை சென்னையில் நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதற்கு ரூ. 9 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

உரத் தொழிற்சாலை மூடிவிட முடிவு

மின்சார வெட்டின் விளைவு

புதுடில்லி, அக். 4—

பஞ்சாப் மாநிலத்தில் கடுமையான மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக நங்கல் இரசாயன உரத் தொழிற்சாலையைத் தற்காலிகமாக மூடிவிடுவது சம்பந்தமாக இந்திய இரசாயன உரக் கழகம் விரைவில் முடிவு செய்யும் என்று தெரிய வருகிறது.

தொழிற்சாலை மூடப்பட்டாலும் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தத் தொழிற்சாலை இதுவரை 164 மெகாவாட் மின்சாரத்தைப் பயன்படுத்தி வந்தது; அது ஏற்கனவே 98 மெகாவாட் ஆகக் குறைக்கப்பட்டது; அது மேலும், 60 மெகாவாட் அளவுக்குக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்படிக் குறைந்த அளவு மின்சாரத்தால் ஆலையை இயக்கினால் இயந்திரங்கள் பழுதடையும் என்பதற்காகத் தற்காலிகமாக மூடப்படும் முடிவு எடுக்கப்படவிருக்கிறது.

இந்திரா காங்கிரசுத் 'தலைவர்'களின் முற்போக்கு வேடம் கலைகிறது!

சாதிப் பித்துக் கொண்டவர்கள் பதவியில் இருந்துகொண்டு செய்யும் அநீதி

மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராமே அம்பலப்படுத்துகிறார்

புதுடில்லி, அக். 5—

நேற்று இங்கு நடைபெற்ற காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராமுக்கும்—ஏனைய காங்கிரசுத் தலைவர்களுக்கும் இடையே கசப்பான வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது.

இன்றியமையாப் பொருள்களை மக்கட்கு அரசே விநியோகம் செய்வது சம்பந்தமான தீர்மானத்தில், 'பலவீனமான பிரிவினர்' என்ற வாசகம் சேர்க்கப்படக்கூடாது—என்று ஜெகஜீவன்ராம் கூறினர்.

ஜெகஜீவன்ராமின் கருத்தை மத்தியப் பிரதேச முதலமைச்சர் சேத்தி எப்படிப் புரிந்துகொண்டாரோ தெரியவில்லை—உடனே அவர் குறுக்கிட்டு, 'நம்மை இந்தப் பலவீனமான பிரிவினர்தான் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர்' என்று குறிப்பிட்டார்.

உடனே ஜெகஜீவன்ராம், 'அதனால்தான் ஒவ்வொருவரும், அவர்கள் (பலவீனமான பிரிவினர்) மீது சவாரி செய்கின்றனர்' என்று சுட்டிக்காட்டினர்.

மேலும் அவர், 'ஒரு பனியா' அமைச்சராகிவிட்டால், அதே வகுப்பைச் சேர்ந்த மேலும் நான்கு பேர் அமைச்சராக வேண்டும்; அதுதான் பலவீனமான பிரிவினருக்கு உதவுவது' கேலியாகக் கூறினர்.

'தீவிரவாதி' என்று கருதப்படும் கே. டி. மாளவியாவும், கட்சிப் பொருளாளர் உமா சங்கர் தீட்சிதரும் ஜெகஜீவன்ராமின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

ஜெகஜீவன்ராமைப் பார்த்து மாளவியா, 'உங்களை ஒரு முற்போக்குவாதி என்று நான் கருதியிருந்தேன்; இப்போது உங்கள் யோசனை எனக்கு வேடிக்கையாகத் தெரிகிறது' என்று கூறினர்.

உடனே ஜெகஜீவன்ராம் அவருக்குப் பதிலளிக்கும் வகையில் கூறியதாவது:—

"தயவு செய்து முற்போக்குக் கொள்கையைப் பற்றி என்னிடம் கூறாதீர்கள்; நீங்கள் ஒரு முற்போக்குவாதியாக நடமாடுவது எனக்குத் தெரியும்; ஆனால் இதுவரையில் நீங்கள் உங்கள் பாரம்பரியத்தையும்—

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய சக்தி உருவாகிறது

வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப திட்டப் பணிகள் அமைய வேண்டும்

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் உருவாகப் பணியாற்றுவோம்

கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

சென்னை, அக். 5—

"காந்தியடிகளின் கருத்துக்கள் எத்தனை எத்தனையோ இன்னும் நிறைவு பெருமல், சொல் அளவிலும் -- பேச்சளவிலும் நிற்கின்றன !

"தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்கிருர்கள் ; மேடைகளில் பேசுகிரும் -- ஆனல் பேசும் அளவுக்குச் செயலில் துடிப்பு இருப்பதில்லை !

"சமுதாயம் ஒவ்வொரு விநாடியும் மாறி அமைந்து வருகிறது ; இதுவே, வளர்ச்சியின் அறிகுறி ; எனவே, வளர்ந்துவரும் தேவைகளுக்கு ஏற்றவாறு திட்டப் பணிகள் அமைய வேண்டும்.

"நாம் அனைவரும் இணைந்து செயலாற்றினல்தான், உலகம் விரும்பும் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.

"இருட்டை எதிர்த்து முழக்கமிடுவதைவிட, ஒரு மெழுகு வத்தியை ஏற்றிவைப்பதே இன்றையத் தேவை ; சமுதாய இடிபாடுகளையும் குறைபாடுகளையும் சாடுவதைவிட, நலம் அமையும் நல்ல சமுதாயத்தை உருவாக்க ஒவ்வொருவரும் தமது பங்கை அளித்துப் பணியாற்ற முன்வருவதே போற்றுதற்குரியது"

என்று, தமிழகக் கல்வி -- உள்ளாட்சி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது வானெலி உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

காந்தி பிறந்த நாளையொட்டித் தொடங்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டம் குறித்து அவர் வானெலியில் ஆற்றிய உரை வருமாறு :—

"நலிவற்ற சிற்றூர்கள் நல்வாழ்வு பெற்றுலன்றி, நாம் பெற்ற சுதந்தரத்தின் முழுப் பயனும் நமக்குக் கிட்டாது -- என்று அண்ணலின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, 1952-ம் ஆண்டு, அவர் பிறந்த இதே நாளில் நாடெங்கும் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்றது.

காலத்தால் சீர்குலைந்துவிட்ட சமுதாயம், ஞாலத்தால் உயர்வு பெற உழைப்பு ஒன்றே உற்ற துணையாகும்.

சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ்வதிலும் -- வளர்வதிலும், ஆர்வம் மிக்க அனைவரும் ஒருங்கிணைந்து பங்கு கொள்வதே சமுதாய நலத் திட்டமாகும்.

கடந்த 20 ஆண்டுகளாக ஊர் வளர்ச்சிக்கான பணிகளில் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிரும் ; நாடெங்கும் நிறைந்துள்ள ஊராட்சி நிறுவனங்கள், வலுவடைந்து -- செயல் திறன் மிக்கவைகளாக அவைகளை மாற்றியமைக்கும் முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளோம்.

இன்றைய ஊராட்சி நிறுவனங்களின் பணிகளில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சியைக் காண முடிகிறது.

பல்கிப் பெருகி வரும் மக்கள் பெருக்கத்திற்கேற்பப் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு கொள்ள முடிந்தது.

ஒவ்வோர் ஊராட்சி நிறுவனமும், தனது ஊரை மேலும் வளமுள்ளதாகவும் -- வசதியுள்ளதாகவும் ஆக்க என்னென்ன பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதில் முழுமையான கவனம் செலுத்துவதே ஊராட்சி உறுப்பினர்களின் மாபெரும் பொறுப்பாகும்.

வளர்ச்சிப் பணிகள் அந்தந்த ஊர்களில் வாழும் மக்களின் அனுபவத்திலிருந்தே உருவாக வேண்டும் ; அரசையும் -- அரசு ஊழியர்களையும் பக்கத் துணையாகவே கொள்ளவேண்டும்.

1972—73-ம் ஆண்டிற்கெனப் பல்வேறு வரவு -- செலவுத் திட்டத் தலைப்புக்களில், ஊராட்சிகளின் மேம்பாட்டிற்கெனத் தமிழக அரசு ரூ 77.14 கோடி ஒதுக்கியிருக்கிறது ; இதைக் கொண்டு ஊராட்சி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயல்படுகிறதென்பது நன்கு புலப்படும்.

ஊர் வளர்ச்சி என்பது -- ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் ஆகியோர் ஆக்கப் பணிகளில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தே அமைய முடியும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் எவ்வளவு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள் என்பதைக் கணக்கிடுவதைவிட, அந்தக் காலவரம்புக்குள் மக்களுக்கு உண்மையில் பலன் தரத்தக்க நற்பணிகள் எத்தனை செய்து முடித்துள்ளார் என்பதே வரலாற்றில் பொறிக்கத்தக்க சாதனையாக இருக்கும் ; அவையே என்றென்றும் அவர் புகழைப் பறைசாற்றி நிலைத்து நிற்கும் !

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஊராட்சித் தலைவர்களைக் குறித்துச் சொன்ன மணிமொழி ஒன்று, இன்று என் நினைவிற்கு வருகிறது—

"நீங்கள், உங்கள் சொந்த வாழ்க்கையைக் கவனிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை ; நீங்கள் சமுதாயத்துக்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறேன் ; அடிப்படையிலிருந்து, நீங்கள் செய்யும் உதவியால்தான், சனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்" என்றார்.

இருபது ஆண்டுக்கால சமுதாய வளர்ச்சித் திட்டத்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும், ஊர்களில் ஒரு புதிய [illegible]ளர்ச்சி தோன்றியிருப்பதை யாரும் மறுக்க இயலாது ; ஊர்கள்தோறும் நம்பிக்கை ஒளி வீசும் நற்காட்சியைக் காண்கிறோம் !

மக்கள் ஆட்சிக்கு அடிப்படையான பண்புகளையும் -- கடமைகளையும் -- பொறுப்புக்களையும் ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் இன்று பாதுகாத்தும் பலப்படுத்திவருகின்றன.

மக்களுக்குப் பணியாற்றுவதில் தலைமைப் பொறுப்பேற்க ஊர்கள்தோறும் பல புதிய சக்திகள் உருவாகி வருவதைக் காண முடிகிறது.

இன்றைக்குக் கிராமப்புற மக்களைத் தங்கள் வளர்ச்சிக்கான வழிகளில் அவர்களையே ஈடுபடுத்தியிருப்பது, சமுதாய நலத் திட்டங்களின் மிகச் சிறந்த -- நிலையான சாதனையாகும்.

உலக உத்தமர் பிறந்த இந்தத் திருநாளில், சமுதாய வேலைகள் இன்னும் தீவிரமாக நடைபெற நாம் அனைவரும் ஒன்றுபட்டு முயற்சிப்போமாக !"

இராமநாதபுரத்தில் டயர் தொழிற்சாலை

அமெரிக்க நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் துவங்கும்

திருச்சி, ஆக. 4—

அமெரிக்காவின் 'ஜெனரல் டயர்ஸ்' என்னும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டிலும், ஜம்மு -- காஷ்மீரிலும், கேரளத்திலும் மூன்று டயர் தொழிற்சாலைகளைத் துவக்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

இதேபோல் பஞ்சாபிலும், குஜராத்திலும் இரு தொழிற்சாலைகளை அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டது ; இவைகள் 'குட்ரிச்' தொழிற்சாலை ஒத்துழைப்புடன் அமைக்கப்படும்.

நெல்லை மாவட்டத்தில் வறட்சி நிவாரணம் -- ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு

திருநெல்வேலி, அக். 4—

"திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசு ரூ 10 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது"

என்று மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி தெரிவித்தார் ; அவர் மேலும் கூறியதாவது :—

"ஏற்கனவே இந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 1 இலட்சம் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் 25 பிர்க்காக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன."

கைவினைஞர்களுக்குக் கடனுதவி அதிகரிப்பு

தமிழக அரசு முடிவு

திருச்சி, செப். 30—

வேலையற்றிருக்கும் கைவினைஞர்கள் தாங்களாகவே, தொழில்களைத் தொடங்குவதற்காகக் கருவிகள் -- சாதனங்கள் வாங்குவதற்கு அரசு ரூ. 1,000 கடனுதவி அளிக்கிறது.

கருவிகள் -- சாதனங்கள் வாங்க இந்தத் தொகை போதாது எனக் கருதிக் கடனுதவி அளவை உயர்த்துவது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

தொழில்களைப் பொறுத்து ரூ 5,000 ரூ. 2,000 ரூ. 1,000 என்று இந்தக் கடனுதவி உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தக் கடனுதவி, கருவிகள் -- சாதனங்களாக அளிக்கப்படும்.

தொழில் பயிற்சி நிலையத்தில் படித்து வேலையில்லாமல் உள்ள கைவினைஞர்களுக்கு இக் கடனுதவி அளிக்கப்படும்.

இக் கடனுதவிக்கு வட்டி கிடையாது ; இந்தத் திட்டத்துக்காக அரசு ரூ 30 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

பிற்போக்காளர் பட்டியலில் காமராசர்

முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்த 'பெரிய மனிதர்' -- பண்டித நேருவால் ஒதுக்கித் தள்ளப்பட்ட வரலாறு

விருத்தாசலம், அக். 5—

"காந்தியடிகள் இந்த நாட்டுக்கு விடுதலை கேட்டபோது, 'விடுதலையால் இந்த நாட்டில் யாருக்கு இலாபம்' என்று மக்கள் மன்றம் கேட்டது ; 'எல்லோருக்கும், உணவு—உடை—இருக்க இடம்—இந்த மூன்றும் தருவதற்காகத்தான் விடுதலை கேட்கிறேன்' என்றார் காந்தியடிகள்.

விடுதலையடைந்து இருபத்தைந்து ஆண்டுகளாகியும் காங்கிரசு தந்த உத்தரவாதங்கள் நிறைவு செய்யப்பட்டனவா? விடுதலையால் யாருக்கு இலாபம் கிட்டியது? எந்த ஏழை இலாபம் அடைந்தான்? உண்ண உணவு – உடுக்க உடை – இருக்க இடம் ஏன் கிடைக்கவில்லை? இதற்குக் காரணம் என்ன ?

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குமாக இருபதாயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டது ; ஆனல், 'மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிய பின்னரும் யாருக்கும் பயன் கிட்டவில்லையே' என்ற சந்தேகம் நேருவுக்கு ஏற்பட்டது ; திரு. மகலநோபிஸ் என்பவர் தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்றை அமைத்தார் ; நாடு முழுவதும் சென்று – ஆய்வுநடத்தி 'இருபதாயிரம் கோடி ரூபாயும் முறையாகச் செலவு செய்யப்பட்டதா' எனத் தகவல் தருமாறு அந்தக் குழுவைக் கேட்டுக் கொண்டார்.

ஆறு மாதத்திற்குப் பின்னர், ஆயிரம் பக்க அள[illegible] அறிக்கை தயாராயிற்று ; அறிக்கையைப் [illegible]சீலிக்க – வெம்மையான நேரத்திலும் – காங்கிரசு செயற்குழுவைப் புதுடில்லியில் கூட்டினர் நேரு ; அக்கூட்டத்தில் நேரு கூனிக் குறுகி நின்றார் ; கலங்காத நேருவின் கண்கள் கலங்கி நின்றன ; காரணம் தெரியாமல் உறுப்பினர்கள் தத்தளித்தனர் !

"நாம் நாட்டிற்கு மோசம் செ[illegible]ம் ; மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டும் பலன்கள் ஏழை எளியவருக்குக் கிட்டவில்லை ; இருபதாயிரம் கோடி ரூபாய் செலவானதில் 75 குடும்பங்கள் இலாபமடைந்திருக்கின்றன ; இவர்களிடம்தான் செல்வங்கள் சிக்குண்டு கிடக்கின்றன" எனச் சொன்னவர் நேரு !

அந்த எழுபத்தைந்து குடும்பங்கள் டாடா – பிர்லா – பஜாஜ் – கோயங்கா – டால்மியா – சிங்கானியா ஆகியவைகளாகும் ; அந்த வரிசையில் தமிழ்நாட்டில் மூன்று குடும்பங்கள் அடங்கியிருந்தன ; இதை எழுபத்தைந்து குடும்பங்களுக்காகவா காந்தியடிகள் விடுதலை கேட்டார் ?

இவர்களிடத்திலேதான் நாட்டின் மிகப் பெரிய பத்திரிகைகளும் – மிகப் பெரிய தொழில்களும் – தேசியமயமாக்கப்படாத வங்கிகளும் இருந்தன!

கோயங்கா குடும்பத்தோடு, பஜாஜ் – டால்மியா குடும்பங்கள் சம்பந்தம் ; டாடா – பிர்லா குடும்பங்களுடன் சிங்கானியா குடும்பம் உறவு வைத்துக் கொண்டிருக்கிறது ; இப்படிப் பணக்கார வர்க்கம் பெண் கொடுத்து பெண் வாங்கி பின்னிப் பிணைந்து நிற்கின்றன !

உற்பத்தி – விநியோகம் இரண்டும் அவர்களிடத்திலே 'அறக்கட்டளை' என்ற பெயரால் இருந்தது ; உற்பத்தி செய்த பொருட்களை அவர்கள் விநியோகம் செய்து வந்தனர் ; அறக்கட்டளை மூலம் விநியோகம் செய்கின்ற பொருட்களுக்கு வரி இல்லை ; இந்த நிலைமையை உருவாக்கியவர்கள் காங்கிரசார்தான் !

இந்தியாவில் மருந்து உற்பத்தி குறைவு ; இந்த எழுபத்தைந்து குடும்பங்களில் இருபத்திமூன்று குடும்பங்கள் அயல்நாடுகளிலிருந்து மருந்தியை இறக்குமதி செய்து – அதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூ 1,200 கோடி இலாபம் அடைந்தன ; இறக்குமதி லைசென்சும் அவர்களுக்கே !

மருந்து உற்பத்தியும் அவர்களுக்கே – மதிநேரு குடும்பங்களுக்குத்தான் ! நம் நாட்டிலேயே மூலிகை உற்பத்தியாகிறது -- இங்கேயே தூளாகிறது -- மாத்திரையாகிறது -- எல்லாமே இங்கேதான் ; அட்டையில் மட்டும் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளில் அம்மருந்துகள் உற்பத்தியாவதாக 'லேபிள்' ஒட்டிக்கொண்டார்கள் ; இதற்காக அந்த நாடுகளுடன் 'டிரேட் ஒப்பந்தம்' செய்துகொண்டார்கள் ; உற்பத்திக்கு ஒரு காசு செலவாகிற மருந்துக்கு நூறு காசு அதிக விலை வைத்து விற்றுக் கொழுத்த இலாபம் அடைந்தனர் !

இந் நிலைமைக்கெல்லாம் யார் காரணம் எனச் சிந்தித்தார் நேரு ; கட்சியிலிருக்கின்ற பிற்போக்காளர்களை வெளியேற்ற வேண்டும் என முடிவு கட்டினர் ; காமராசரை ஐதராபாத்திற்கு வருமாறு தொலைபேசியில் அழைத்தார் ; அவரைச் சந்தித்துத் திரும்பிய காமராசர், 'நான் பதவி விலகப் போகிறேன்' என்றார் !

அவரைப் பதவி விலகச் சொன்னவர் நேரு ; ஆனல் காமராசர் இங்கே வந்து, 'பதவி விலகப் போகிறேன்' என்றார் ; 'காமராசர் திட்டம்' என்ற பெயரில், பதவியில் இருக்கின்ற மூத்த தலைவர்களை -- முன்னேற்றத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்த பிற்போக்காளர்களை -- காமராசரையும் சேர்த்து வெளியே போகச் சொன்னார் நேரு !"

-- திருப்பத்தூர் இராமமூர்த்தி

(அண்ணா பிறந்தநாள் விழாக் கூட்டத்தில்)

ஊற்றுக் கிடைக்காத கிணறுகள்

கடன் வசூலைக் கைவிடுவது பற்றி அமைச்சர்

தஞ்சை, செப். 4—

"கிணறு தோண்டுவதற்கு விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள் ; இப்படிக் கடன் வாங்கிக் கிணறுகள் தோண்டியபோதிலும், அவ்வாறு தோண்டப்படும் கிணறுகளில் ஊற்றுக் கிடைப்பதில்லை ; வறட்சிப் பகுதிகளில் பல நூறு அடி தோண்டிய பிறகும் தண்ணீரே கிடைப்பதில்லை என்ற நிலைமை இருந்துவருகிறது ; எனவே, தண்ணீர் கிடைக்காமல் போனல், கிணறுகள் தோண்டுவதற்காக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன்களைத் திருப்பிக் கேட்காமல் இருக்கலாம் ; இதுபற்றி மத்திய அரசிடம் நான் யோசனை கேட்டிருக்கிறேன் ; அவ்வாறு திருப்பிக் கேட்காமல் இருப்பதனல், மாநில அரசுக்கு ஏற்படக்கூடிய இழப்பில் ஒரு பகுதியை மத்திய அரசு ஏற்க வேண்டும் என்று கோரியிருக்கிறேன்"

என்று வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

அறந்தாங்கி அருகே உள்ள தொழுவங்காடு கிராமத்தில், குழந்தைகள் நல நிலையத்தைக் கடந்த வியாழனன்று அமைச்சர் திறந்து வைத்தார். அதுபோது அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நாய் --- பன்றிகள் தெருவில் திரியத் தடை

விஜயவாடா நகராட்சி கடும் நடவடிக்கை

விஜயவாடா, அக். 4—

"தெருவில் திரியும் நாய்களைப் பிடித்து நகராட்சியில் ஒப்படைத்தால் ஒவ்வொரு நாய்க்கும் 50 காசு தரப்படும்"

என்று விஜயவாடா நகராட்சி அதிகாரி அறிவித்துள்ளார்.

பன்றிகளைத் தெருவில் திரிய விடக்கூடாது என்று 10 நாட்களுக்குமுன் அறிவிக்கப்பட்டிருந்தது ! அதை மீறித் தெருவில் சுற்றிக் கொண்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட பன்றிகள் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றன; இவைகளை ஏலம் விட்டதன்மூலம் ரூ. 1,000 கிடைத்ததாம்.

இதேபோல் கால்நடைகளும் பிடிக்கப்பட்டு -- அபராதம் விதிக்கப்பட்டுச் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

இந்த மிருகங்களின் தொல்லைகள் அதிகமாகி விட்டதைத் தொடர்ந்து நகராட்சி தீவிர நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

பொருளாதாரக் குற்றங்களுக்குக் கடுந்தண்டனை

சட்டம்இயற்ற ஆலோசனை

புதுடில்லி, அக். 4—

பொருளாதாரத் துறையில் குற்றம் புரிபவர்கள் -- சமூக விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஆகியோர்களுக்குக் கடுமையான தண்டனை விதிப்பதற்கு புதிய சட்டம் இயற்றுவது பற்றி மத்திய அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

சட்டக் குழுவும் தனது அறிக்கையில் இதுபோன்று பரிந்துரை செய்திருக்கிறது.

பணிபுரிவதற்குக் கிடைக்கும் வாய்ப்பே பதவி

அதிகாரங்களைவிடப் பொறுப்பே முக்கியமானது

மக்களாட்சி மலர --- பொதுத் தொண்டு சிறக்க --- புத்தொளி நாடெங்கும் பரவ கலைஞர் வழங்கிய நல்லுரை

சென்னை, அக். 4—

"மக்களின் ஆர்வத்தோடு அரசு அலுவலர்களின் திட்டமிட்ட பணியும் இணையும்போது வளர்ச்சி மேலோங்குகிறது !

"பொறுப்பின்றி பதவியோ – அதிகாரமோ இல்லை ; அதிகாரங்களைவிடப் பொறுப்புத்தான் முக்கியம் !

அதிகாரங்கள் தேய்ந்து – பொறுப்புக்கள் தன்னியல்பாகி விடுவதே உண்மையான மக்களாட்சி !

பதவிகள் – பணிபுரிவதற்குக் கிடைக்கும் வாய்ப்புக்களாகக் கருதப்பட வேண்டும்.

அதிகாரங்கள் தீப் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் – என்கின்ற உணர்வு வந்தாக வேண்டும் ; அப்போதுதான் பொதுவாழ்வு சிறக்கும்–பொதுத்தொண்டு வெற்றி பெறும் – புத்தொளி நாடெங்கும் பரவும் !

கிராமங்களின் வளர்ச்சியை யொட்டியே நாட்டின் எதிர்காலம் அமையும் ; ஊராட்சிகளில் இருந்துதான் மக்களாட்சி தொடங்குகிறது ; மறுமலர்ச்சி என்பதும் அங்கிருந்தே முகிழ்க்க வேண்டும்.

"இனிய பொழில்களையும் – நெடிய வயல்களையும் கணக்கின்றிப் பெற்றுள்ள நம் தாய்த் திருநாட்டில், விளைவு பெருகி – வறுமை மாய்ந்து – அமைதி தவழ்ந்து – அறிவு பரவி – ஆற்றல் மிகுந்திட இந்த வார விழா கால்கோள் விழாவாக அமையட்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சமுதாய நலத் திட்ட வார விழாவையொட்டி 1–10–72 அன்று வானெலியில் ஆற்றிய உரையில் சுட்டிக்காட்டினர் ; அவர் ஆற்றிய உரை வருமாறு :—

"சமுதாயம், தனி மனிதர்களின் கூட்டு; தனி மனிதர்களால் உருவாக்கப்படுகிறது.

சமுதாயத்தின் மொத்த வாழ்வு பற்றியே நாம் கவலைப்படுகிறோம் ; எனினும், அந்த வாழ்வுக்கு ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தனி மனிதனின் செயல் -- ஒழுக்கம் -- அரசியல் பண்பாடு பொதுத் தொண்டில் உள்ள ஆர்வம் -- மனத்தூய்மை -- பேச்சு -- எழுத்து -- அறிவு -- ஆற்றல்கள் அனைத்தும், துணை நதிகளாகி -- சமுதாய மெனும் காவிரிப் பெருநதியாகப் பெருக்கெடுத்து -- வாழ்வில் வளமும் நலனும் சேரக் கிளை நதிகளாக -- வாய்க்கால்களாகப் பிரிந்து கடமையாற்றுகின்றன.

செயல், தன்னலத்திற்காக அமைந்து -- ஒழுக்கம் ஊருக்குச் செய்யும் உபதேசமாக இருந்து -- அரசியல் பண்பாடு எரிச்சலுக்கு ஆளாகி அழிந்துபட்டு -- பேச்சிலும் எழுத்திலும் தரக்குறைவுகள் தலையெடுத்து -- அறிவும் ஆற்றலும் பழி வாங்குவதற்கே பயன்படுத்தப்பட்டு -- பொதுத் தொண்டில் ஆர்வம் என்பது வெளி வேடமாகி விடுமேயானல், சமுதாய நலத் திட்டங்களுக்கென அளவற்ற பொருளை அள்ளி வழங்கினலும், அதனல் கிடைக்கும் பயன் மிகச் சொற்பமாகவே போய்விடும் ; அதனல் தான் அண்ணல் காந்தியடிகள், 'தூய்மையான மனத்துடன் இந்தப் பணியிலே புகுந்திட வேண்டும்' என விரும்பினர் !

வெறும் சொல் அளவிலே நின்றுவிடாமல், 'சுதந்தரம் பெற்ற நாட்டின் ஒளிமிகுந்த வாழ்க்கை அந்த நாட்டிலுள்ள கிராமப் புறத்து மக்களின் சுதந்தர சுக வாழ்விலிருந்துதான் உதயமாகி விட வேண்டும்' என்பது அவர் கருத்து.

மக்களாட்சியின் மாண்புக்கே வழி வகுக்கக்கூடியது -- அடித்தள மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை மையமாக வைத்துக் காரியங்களை மேற்கொள்வது தான்' என்றும் திடமாக எடுத்துக் கூறி -- அந்தப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார் !

ஆன்றோர்கள் உருவாக்கிய பழந் தமிழ் இலக்கியங்களிலும் -- பிற்காலக் கல்வெட்டுக்களிலும், கிராம மக்களின் நலன்களையும் உரிமைகளையும் காக்கவும் -- அவர்தம் வாழ்வை வகுத்துக் கொள்ளவும் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் கண்ணுறும் தமிழர்களாகிய நமக்கு, காந்தியடிகளின் தத்துவம் கற்கண்டாய் -- தேன் பாகாய் இனிப்பதில் வியப்பேதுமில்லை அல்லவா ?

சமுதாயத்தில் -- எல்லாக் கட்டங்களிலும் வளம் சேர்க்கச் சமுதாய நலத் திட்டப் பணிகள் பயன்படுகின்றன ; அந்தப் பணியினை மெத்த ஆர்வத்துடன் செய்திடும் ஊராட்சிகளை மேலும் ஊக்கப்படுத்தவே இவ்வாண்டும் அதற்கான வார விழாவை நடத்திட முன்வந்துள்ளோம்.

இலட்சிய ஆர்வமும் -- ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த நடைமுறைப் போக்கு, இன்று ஊராட்சி மன்றங்களிடையே தோன்றியுள்ளன ; இந்தப் பேரொளி நின்று நிலைக்கும் போது, ஏற்றத் தாழ்வற்ற -- வளம் நிறைந்ததொரு சமுதாய அமைப்பை நம்மால் உறுதியாக உருவாக்க முடியும்.

கடந்த ஆண்டுகளில் விவசாய வளர்ச்சிக்கெனப் புதிய ஆய்வுகள் நடத்தி -- விஞ்ஞான நுட்பங்களைப் பயன்படுத்தி -- மிகு விளைச்சலுக்கான ஆக்க வேலைகளில் முனைந்து நின்ற ஊராட்சி மன்றங்கள் என்றும் நமது பாராட்டுக்குரியன !

ஊர் மக்களிடை பசுமைப் புரட்சி செய்வது மட்டுமன்றி, அறிவிப் புரட்சியும் செய்து அவர்களை மனவளமுள்ளவர்களாக -- சுகாதார வசதிகளைப் பெறுவதில் முன் நிற்பவர்களாக ஆக்குகின்ற முயற்சிகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

தொடர்ந்து தொண்டாற்றஇன்று இந்த விழாவைத் தொடங்கி வைக்கிறேன்.

மேற்கொள்ள வேண்டிய புதிய வேலைகள் பற்றியும், ஊராட்சித் திட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சிறப்பிடம் பற்றியும், வட்டார அளவிலும் -- மாவட்ட அளவிலும் இவ்விழாவின்போது விரிவான விவாதங்கள் நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறேன்.

அந்தந்த வட்டாரங்களின் வளர்ச்சிக்கேற்பச் செயல்படத்தக்க கருத்துக்களைத் திரட்டி மேற்கொள்வதற்கான வழிவகையும் ஆராயப்பட வேண்டும்.

சமுதாயம் ஒன்றுபட்டு நிற்கும் போது அனைவருக்கும் பயன் கிட்டும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், சமுதாயம் முழுமையும் இவ்விழாவில் பங்கு கொள்ளத்தக்கவாறு எல்லாப் பிரிவினரையும் கவரக்கூடிய -- நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகளோடு இவ்விழா நிறைவு பெற ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்திடுமாறு பெரிதும் வேண்டுகிறேன்.

புதிய வேளாண்மைக் கிணறுகள் சமுதாயக் கிணறுகள் அமைத்தல் -- குடிநீர்க் கிணறுகள் தோண்டுதல் -- பாசன வசதி மேம்பாட்டுக்கான வாய்க்கால்களை வகைப்படுத்தல் -- இணைப்புச் சாலைகளைப் போடுதல் -- வானெலி மன்றங்களை ஏற்படுத்தல் -- இளைஞர் அணியினருடன் தொடர்பு கொண்டு அவர்கள் ஆற்றலைப் பயன்படுத்துதல்—தீண்டாமை நோய் எந்த வழியிலும் தலைகாட்டாமல் தடுத்தல் -- குடும்ப நலத் திட்டங்களை நிறைவேற்றுதல் விளக்குதல் -- சத்துணவுத் திட்டம் பற்றிய விவரங்களை அளித்தல் -- கண் ஒளி குறைந்தோருக்கு ஒளி வழங்கும் திட்டம் பற்றி எடுத்துச் சொல்லி அவர்களை அதன் பயனை அனுபவிக்கச் செய்தல் -- இளம் மாணவருக்கு உற்சாகமூட்டும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் -- பேச்சுப் போட்டிகளை ஏற்பாடு செய்தல் -- இதுபோன்ற நூற்றுக் கணக்கான செய்கைகளைப் பொறுப்பிலே உள்ளவர்கள் கடுகளவும் தன்னலமின்றிச் செய்வார்களேயானல், புன்னகைப் பூங்காவாக நமது பூமி திகழும் !"

மதுரை மாவட்டத்தில் துயர் தணிப்புப் பணி

மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்

மதுரை, அக். 4—

"வறட்சியால் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்துக்குத் துயர் தணிப்புப் பணிகளுக்காக மேலும் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; மதுரை மாவட்டத்தின் 34 பிளாக்குகளில் 23 பிளாக்குகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன ; ஏற்கனவே இம்மாவட்டத்துக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; கிணறுகளை ஆழப்படுத்தி குடிநீர் வசதிகளுக்காக இந்தத் தொகை அனுமதிக்கப்பட்டிருந்தது ; இப்போது ஒதுக்கப்பட்ட ரூ. 10 இலட்சம் வேலையில்லாத உழவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

"மதுரை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்திருந்தும் பெரியாறு -- வைகை அணைக்கட்டுகளின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் போதிய மழை இல்லை !"

என்று, மதுரை மாவட்டக் கலெக்டர் சீதாராம தாஸ் தெரிவித்திருக்கிறார்.

"போதிய மழை இல்லாமையும் -- காலங்கடந்த மழையும் மாவட்டத்தின் வேளாண்மைத் தொழிலைக் கணிசமாகப் பாதித்திருக்கிறது" என்றும் அவர் கூறினர்.

தொழிலாளர் நலம் காப்பதில் கழக அரசு

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனை

சென்னை, செப். 4—

"தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவேண்டும் ; அப்போதுதான் தொழிலில் ஊக்கம் இருக்கும்.

'உலகத் தொழிலாளர்களே -- ஒன்று சேருங்கள்' என்று குரல் கொடுக்கின்றவர்கள். ஊர்த் தொழிலாளர்களைக்கூட ஒன்று சேர்க்க முடியாமல் இருக்கிறார்கள்.

தொழிலாளப் பெருமக்களின் கரங்கள் காக்கும் கரங்களாக இருக்கக்கூடாது!

நாட்டுக்கு நலம் சேர்ப்பது வன்முறையா -- நன்முறையா என்பதைத் தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

தொழிலாளர் தலைவர்களிடம் வன்முறை தலைதூக்கினல் அதைத் தவிர்ப்பது தொழிலாளர்களின் கடமையாக இருக்க வேண்டும்.

எந்தப் பிரச்சினையானலும், அதைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வதுதான் நன்மை பயக்கும் ; இதைத்தான், 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்று திருவள்ளுவரும் கூறினர்.

தொழிலாளர்களிடம் வேகம் மட்டும் இருந்தால் போதாது -- விவேகமும் வேண்டும் ; இதை மறைக்கும்போதுதான், 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்த' கதை ஆகிவிடுகிறது ; இப்படி நடக்கத் தொழிலாளர்கள் இடம் தரக்கூடாது.

இந்த அரசு தொழிலாளர் நலம் காக்கும் அரசாகும் ; பஸ்களை நாட்டுடைமையாக்கியபோது ; 'இலாபத்தில் 25 பங்கை தொழிலாளர்களுக்கே தரவேண்டும்' என்று கலைஞர் அவர்கள் கூறியதே அதற்கும் போதுமான உதாரணமாகும்.

பெரிய பெரிய தீவிரவாதிகள் -- அதிதீவிரவாதிகளெல்லாம் மேற்கு வங்கத்திலிருந்து கேரளம் வரை ஆண்டிருந்தாலும்கூட, எந்த நாட்டு முதல்வரும் செய்திராத தொழிலாளர்களுக்கு நன்மை தரும் பல திட்டங்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்."

—அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்

(பிரதாப் சந்திரன் குடும்ப நிதியளிப்பு விழாவில்)

இரண்டாண்டுக்கு வேலை நிறுத்தம் வேண்டாம்

உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபடுவீர்

தொழிலாளர்களுக்கு அமைச்சர் என். வி. நடராசன் யோசனை

கும்பகோணம், அக். 5—

"இரண்டாண்டுக் காலத்துக்கு வேலைநிறுத்த யோசனைகளை ஒத்திவைத்துத் தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்க முன்வர வேண்டும்"

என்று, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் இங்கு கேட்டுக்கொண்டார்.

செய்தியாளர்களிடம் பேசுகையில், இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"எந்தத் தொழில் பிரச்சினையாயினும் பேச்சுவார்த்தைகள் மூலம் விரைவில் அவற்றைத் தீர்த்து வைப்பதே அரசின் கொள்கையாகும்; வேலைநிறுத்தம்--கதவடைப்பு போன்றவை காரணமாக ஏற்படும் எல்லா ஒழுங்கு நடவடிக்கைகளையும், போலீசு வழக்குகளையும் திரும்பப் பெறுவதற்கு அரசின் இந்தக் கொள்கையே காரணமாகும்.

சுமார் ஆறு மாத காலம் நடைபெற்ற சிம்சன் வேலைநிறுத்தம் காரணமாக அங்கு ஒவ்வொரு தொழிலாளியும் சராசரியாக ரூ. 3,000 இழந்திருக்கின்றனர்; இதன்றி, உற்பத்தியிலும் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

நியாயமற்ற காரணங்களுக்காக நடைபெறும் வேலைநிறுத்தங்களைக் கைவிடும்படி வேண்டுகோள் விடுவதற்குக் காமராசர் முன்வர வேண்டும்; குட்டையைக் கலக்கி மீன் பிடிக்க அவர் முயற்சிக்கக் கூடாது.

அதே நேரத்தில், தொழிலாளர்களிடம் நியாயம் இருந்து -- அரசு அதற்கு எதிராகச் செயல்பட்டால், அதைத் திருத்தும் உரிமை காமராசருக்கு உண்டு."

கடைசி ஆயுதமே வேலைநிறுத்தம்

இங்கு தொழிலாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில், அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையைக் கழக அரசு ஒருகாலும் மறுக்காது; ஆனால், தொழிலாளர்கள் இதைக் கடைசி ஆயுதமாகத்தான் பயன்படுத்த வேண்டும்."

ஞாயிற்றுக்கிழமையில் மணியார்டர்கள் பட்டுவாடா

அஞ்சல் துறையில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது

சென்னை, செப். 10—

"எக்ஸ்பிரஸ் கடிதங்கள் பட்டுவாடா முறை உள்ள எல்லா இடங்களிலும் இனி ஞாயிற்றுக்கிழமை மற்றும் தந்தி மணியார்டர் பட்டுவாடா செய்யப்படும்."

என்று, அஞ்சல் துறை தலைமை அதிகாரி சி. ஏ. தயாநாதன் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் மட்டும் தற்போது எக்ஸ்பிரஸ் கடிதங்கள் பட்டுவாடா செய்யும் 282 அஞ்சல் நிலையங்கள் உள்ளன.

"அஞ்சல் அலுவலகங்கள் பிரச்சினையில தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது.

அனைத்திந்திய அடிப்படையில் 5,000 பேருக்கு ஓர் அஞ்சல் நிலையம் இருக்கிறது என்றால், தமிழ்நாட்டில் 4,000 பேருக்கு ஒரு அஞ்சல் அலுவலகம் இருக்கிறது.

அனைத்திந்திய அடிப்படையில் 30 சதுர கிலோ மீட்டருக்கு ஓர் அஞ்சல் அலுவலகம் உள்ளது; ஆனால் தமிழ்நாட்டில் 12.50 சதுர கிலோ மீட்டருக்கு ஒரு அஞ்சல் அலுவலகம் இருக்கிறது.

சென்னை நகரில், பார்க் டவுன் -- மயிலாப்பூர் ஆகிய இடங்களிலும், திருநெலவேலி -- கோவை ஆகிய இடங்களிலும் இரவு நேர அஞ்சல் அலுவலகங்களைத் திறக்க நடவடிக்கைகளை எடுக்கப்படுகின்றன.

இந்த இரவு நேர அஞ்சல் அலுவலகங்கள் வாரத்தில் எல்லா நாட்களிலும் காலை 8 மணிமுதல் இரவு 8-30 வரை தொடர்ந்து இயங்கும்.

நாட்டில் மொத்தம் 129 இடங்களில் இரவு அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன.

ஐந்தாம் படை வேலை செய்தவர்கள்

வங்க தேசத்தில் 41,000 பேர் கைது

புதுடில்லி, அக். 5—

வங்காள தேச விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடுமைகட்கு உதவி புரிந்ததாக வங்காள தேசத்தில் சுமார் 41,000 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; இவர்களில் 275 பேர் போலீசுத் துறையைச் சேர்ந்தவர்கள்.

இலஞ்ச ஊழல் புகார்களையொட்டியும் -- பாகிஸ்தான் இராணுவத்தின் கொடுமைகட்குத் துணைபுரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டையொட்டியும் பல அரசு அதிகாரிகள் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டிருக்கின்றனர்; மேலும் பலர் மீதான புகார்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

கேரளத்தில் கொலைக்குக் கொலை

கொச்சி, அக். 5—

கேரளத்தில் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அழிக்கோடன் இராகவன் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கம்யூனிஸ்டு ஐக்கிய நிறுவனம் என்ற அமைப்பைச் சேர்ந்த டேவிஸ் என்ற ஊழியர் கொலை செய்யப்பட்டார்; திருச்சூர் அருகே ஒரு கால்வாயில் அவரது உடல் காணப்பட்டது.

டேவிஸ் கொலை சம்பந்தமாக 5 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; அவர்கள் அனைவரும் இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் என்று சொல்லப்படுகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதிப் பித்தையும் கைவிடவில்லை என்பதையும் நான் அறிவேன்."

பின்னர், உமாசங்கர் தீட்சிதருக்குப் பதிலளிக்கும் வகையில் ஜெகஜீவன்ராம் தெரிவித்ததாவது:—

"கட்சி பலவீனமான பிரிவினருக்குத் தேர்தல் டிக்கெட் வழங்கியது எனக்குத் தெரியும்; ஆனால் ஒவ்வொரு மாநிலத்திலும் எந்தக் குறிப்பிட்ட பகுதியினர் பலவீனமான பிரிவினர் என்று கருதப்பட்டனர் என்பதும் அனைவருக்கும் தெரிந்ததாகும்."

கேரளத்தில் அமைச்சர் சாதிக் பாட்சா

★

ஆற்றுநீர்ப் பிரச்சினையில் உடன்பாடு ஏற்படும்

திருவனந்தபுரம், அக். 5—

கேரளம் -- தமிழ்நாடு அரசுகளின் அமைச்சர்களிடையே நேற்று நடைபெற்ற ஆற்று நீர்ப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்று நம்பப்படுகிறது.

தமிழகப் பொதுப்பணி அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சாவும் -- கேரள அமைச்சர் திவாகரனும் நேற்று மூன்று மணி நேரம் கூடிப் பேசினர்.

பேச்சுவார்த்தைக்குப் பின், கேரள அமைச்சர் திவாகரன் செய்தியாளரிடம் பேசுகையில், கருத்து வேற்றுமைகள் பெரும் அளவு குறைந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சாவும் அதுபோன்றே, விரைவில் ஓர் ஒப்பந்தம் ஏற்படும் என்று நாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

அமைச்சர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் இருமாநில அதிகாரிகளும் பங்குகொண்டனர்; பேச்சுவார்த்தை இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது.

கோவை நகரக் குடிநீர்த் தேவைக்காக சிறுவாணி ஆற்றிலிருந்து கேரளம் 1,300 எம். சி. தண்ணீர் தருவது என்பது ஏற்பாடாகும்.

பாண்டியாறு -- புன்னம் புழா ஆற்று நீரைப் பயன்படுத்துவது சம்பந்தமாக விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இணைப்புச் சாலைகள் அமைப்பதிலும் முன்னோடியாகத் தமிழகம்

பிற மாநிலங்களும் பின்பற்றுகின்றன

சென்னை, அக். 4—

"சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் -- நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் நாம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

இந்தியாவில் நூற்றுக்கு எண்பது சதவிகித மக்கள் கிராமத்தில் தான் வாழ்கிறார்கள்; நகரங்கள் முன்னேற வேண்டுமானால் கிராமங்கள் முன்னேறியாக வேண்டும்.

பல திட்டங்களை நாம் நிறைவேற்றினாலும்கூட, நாட்டின் முன்னேற்றத்தைக் காண இயலவில்லை; சாலைப் போக்குவரத்து சரியாக இல்லாமலிருப்பதே இதற்குக் காரணமாகும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதுபற்றிப் பொறியாளர்களுடன் கலந்தாலோசித்து, 1,500 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடுவது என முடிவு செய்தார்; நாம் எடுத்த அந்த முடிவைப் பின்பற்றி இப்போது இந்தியாவில பல்வேறு மாநிலங்களிலும் அதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் சாலை போடுவதானால், தேவைப்படும்போது தனியார் நிலங்களையும் ஆக்கிரமிக்க வேண்டியிருக்கும்; அதற்காக வருவாய் காரியத்தை அணுக வேண்டும்; அதனால் திட்டத்தின் வேகம் தேக்கமடையாமலிருக்க கிராமப்புற மக்களுடன் கலந்தாலோசித்து--அது பற்றிய சிக்கல்களைத் தவிர்த்து--திட்டத்தைத் துரிதப்படுத்த முயற்சிக்கப்பட்டது.

இதுபோன்ற திட்டங்களில் கிராமப்புற மக்களையும் ஈடுபடுத்துவோமானால் அவற்றைச் செயல்படுத்துவது எளிதாக இருக்கும்.

சாலைகள் அமைக்கும்போது இருபக்கமும் மரம் வைக்க ஒரு திட்டம் இருக்கிறது; இதற்காகக் கிராமப் பஞ்சாயத்துகள்மூலம் கிராம மக்களை அணுகி -- அவர்களுக்கு இந்தப் பணியில் ஈடுபாடும் ஆர்வமும் ஏற்படச் செய்யலாம்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், கனவுகூட காணமுடியாத பல பெரிய பெரிய திட்டங்கள் எளிதாக நிறைவேற்றப்படுகின்றன; இந்த நாட்டு முன்னேற்றம் நமது முன்னேற்றம் என்று கருதி அனைவரும் செயல்பட வேண்டும். அரசுடன் அதிகாரிகளும் -- பொதுமக்களும் கட்டுப்பாட்டுடன் இணைந்து செயல்பட்டால்தான வெற்றி காணமுடியும்."

--அமைச்சர் சாதிக் பாட்சா

(கருத்தரங்கில்)

தமிழ் மகளிராக இருப்பீர்

மேலை நாகரிகத்திற்கு இடந்தராதீர்

கற்கும் விஞ்ஞான அறிவு தமிழ்நாட்டின் பண்பாட்டுடன் இணைவதாக இருப்பது அவசியம் -- கலைஞர் கனிவுரை

சென்னை, அக். 5—

"தமிழ்நாட்டில் கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 9,000 என்று கணக்கிடப்படுகிறது; அவர்களில் மகளிர் மட்டுமே ஏறத்தாழ 2,500 பேர்களாவர்.

"இந்த நேரத்தில், மகளிர் குலத்திற்கு ஒன்றை வேண்டுகோளாகச் சொல்லிக்கொள்வேன் -- படித்துவிட்ட பின்னரும் அவர்கள் தமிழ் மகளிராகவே இருக்கவேண்டும்; படிக்கின்ற படிப்பு -- ஏதோ மேல்நாடுகளில் இருக்கின்ற புதிய நாகரிகத்தைக் கொண்டுவருவதற்காகத் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு வழி -- மார்க்கம் என்று அவர்கள் கருதிக்கொள்ளக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

"மேலைநாடுகளின் விஞ்ஞான ஆராய்ச்சிகள் -- அதனால் விளைகின்ற புதுமைகள் அனைத்தும் தமிழ்நாட்டின் பண்பாட்டுடன் கலந்திடவும் -- நம்முடைய அறிவுத் துறையுடன் இணைந்திடவும் -- அந்த நாடுகளைப்போல் நம் நாடு வளரவுமான வகைகளில் பயிலவேண்டுமேயல்லாமல்; மேலைநாடுகளின் நாகரிகங்கள் -- பழக்கவழக்கங்கள் ஆகியவைகளை கற்றுக்கொள்ளத்தான் நாம் படிக்கிறோம்" என்ற உணர்வைப் பெண்களாயினும், ஆண்களாயினும் பெற்றிடல் கூடாது."

—ஆராய்ச்சிக்கூடத் திறப்பு விழாவில்

3 குழந்தைகட்கு மேல் பெறும் அரசு ஊழியர்

இலவச மருத்துவ வசதியை இழந்துவிடுவராம்

அகமதாபாத், அக். 5—

"மூன்று குழந்தைகட்கு மேல் பெறும் அரசு ஊழியர்களுக்கு இலவச மருத்துவ வசதியை நிறுத்திவிட குசராத் அரசு ஆலோசனை செய்து வருகிறது"

என்ற தகவலை, குசராத் சுகாதார அமைச்சர் வாசுதேவ திரிபாதி தெரிவித்தார்.

மைசூரில் மற்றொரு தங்கச் சுரங்கம்

ரூ. 15 கோடி செலவில் வெட்டப்படுமாம்

ஷிமோகா, அக். 5—

இந்தியாவிலேயே பெரும் அளவில் தங்கம் கிடைப்பது மைசூர் மாநிலத்தில்தான்; இங்குள்ள தங்கச் சுரங்கங்களில் ஆண்டுக்கு 4,000 கிலோ தங்கம் (ஏறத்தாழ ரூ. 40 கோடி மதிப்புள்ளது) வெட்டப்படுகிறது; இந்தச் சுரங்கங்களில் 30,000 பேர் பணியாற்றுகின்றனர்.

இப்போது மைசூரிலுள்ள ஷிமோகா மாவட்டம் கோனலி வட்டத்தில் மற்றொரு தங்கச் சுரங்கம் தோண்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதற்கு ரூ. 15 கோடி செலவாகும்.

தொழில் வளர்ச்சி பாங்கி வழங்கிய நிதியுதவி

பம்பாய், அக். 5—

1971--72-ம் ஆண்டில இந்தியத் தொழில் வளர்ச்சி பாங்கி அளித்த நிதியுதவியில், மகாராட்டிரத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடுதான் அதிகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட்ட ரூ. 30.42 கோடி உதவியில், அது ரூ. 14.30 கோடியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

மைசூர் ரூ. 19 கோடியில் ரூ. 3.63 கோடி செலவிட்டது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

6--10--72

பட்டுக்கோட்டை

17-வது வட்ட நண்பர்கள் குழு சார்பில் மாலை 6-மணிக்கு தலைமை அஞ்சலகம் அருகில்; தலைவர்: ஆர். சீனிவாசன்; பேசுவோர்: எம். எம். பீர் முகம்மது, துரை. சின்னம்பா, கே. மாணிக்கம், கி. மணியரசன், சி. நாடிமுத்து.

குழுக் கூட்டம்

ஜெயங்கொண்டம் வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 7—10—72 காலை 11-மணிக்கு ஜெயங்கொண்டம் வட்டச் செயலாளர் அறையில் நடைபெறும்; செயற்குழு உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் க. சொ. கணேசன் கேட்டுக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, ... அச்சகத்தில் ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது.